A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.

-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 12 / 2024</u>**

திரு A.S. இராஜசேகரன்,
S/o. M.S.A. செந்தியப்ப நாடார்,
D.No. 678 ஞானகிரி ரோடு, சிவகாசி – 626 189,
விருதுநகர் மாவட்டம். ………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு S.R. ஸ்ரீதர்)

எதிர்

1) செயற்பொறியாளர்/ பகிர்மானம்/சிவகாசி,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
O/o. செயற்பொறியாளர் /பகிர்மானம்,
பெல் ஓட்டல் அருகில், சிவகாசி – 626 123.

2) உதவி செயற்பொறியாளர்/நகர்/ வடக்கு/சிவகாசி,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
O/o. உதவி மின்பொறியாளர்/பகிர்மானம்,
பெல் ஓட்டல் அருகில், சிவகாசி – 626 123.

3) உதவி மின்பொறியாளர்/ நகர்/ வடக்கு/சிவகாசி,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
O/o. உதவி மின் பொறியாளர்/ நகர்/ வடக்கு,
பெல் ஓட்டல் அருகில், சிவகாசி – 626 123. . . . எதிர்மனுதாரர்கள்
(திரு S. பாவநாசம், செயற்பொறியாளர்/ பகிர்மானம்/சிவகாசி
திரு G. முருகேசன், உதவி செயற்பொறியாளர்/நகர்/ வடக்கு/சிவகாசி
திரு G. காமராஜ், உதவி மின்பொறியாளர்/ நகர்/ வடக்கு/சிவகாசி)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 19-02-2024</u>**

**<u>அட்டவணையிடப்பட்ட நாள் 17-04-2024</u>**

**<u>ஒத்திவைக்கப்பட்ட கேட்புரை நாள்: 23-04-2024</u>**

**<u>ஆணை நாள்: 06-05-2024</u>**

19.02.2024 அன்று பெறப்பட்ட திரு A.S. இராஜசேகரன், S/o. M.S.A. செந்தியப்ப நாடார், D.No. 678 ஞானகிரி ரோடு, சிவகாசி – 626 189, விருதுநகர் மாவட்டம் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 12/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 17.04.2024 அன்று அட்டவணையிடப்பட்டு மேல்முறையீட்டாளரின் வேண்டுகோளுக்கிணங்க 23.04.2024 அன்று விசாரணை நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையின் மூலம் பெறப்பட்ட வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

தனது மின் இணைப்பு எண் 239–006–815–இல் கூடுதலாக வசூலிக்கப்பட்ட தொகையை திருப்பி வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 தனது மின் இணைப்பு எண் 239–006–815–இல் கூடுதலாக வசூலிக்கப்பட்ட தொகையை திருப்பி வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 06/2022 மற்றும் 08/2022 மாதங்களில் மின் அளவி பழுது ஏற்பட்டதால் பதிவான பயனீட்டு அளவுகளின் அடிப்படையில் சராசரி மின் கட்டணம் விதிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் விருதுநகர் மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், விருதுநகர் மின் பகிர்மான வட்டம் 11.01.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **<u>மன்றத்தின் தீர்வு :</u>**

3.1 விருதுநகர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 11.01.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
> *மனுதாரர் திரு. ராஜசேகரன் அவர்களின் மின் இணைப்பு எண்: 239-006-815 ற்கு 06/2022 மற்றும் 08/2022 காலகட்டங்களில் விதிக்கப்பட்டுள்ள மின் கட்டணம், 10/22 மற்றும் 12/2022 கணக்கீட்டிற்கு விதிக்கப்பட்டுள்ள சராசரி மின் கட்டணம், அதன் பின்னர் சீராய்வு செய்யப்பட்டு விதிக்கப்பட்டுள்ள கூடுதல் சராசரி மின் கட்டணம் ஆகியவை சரியானதே என்று, உத்தரவிட்டு மன்ற மனு எண்: 44/2023 இம்மன்றத்தால் முடித்து வைக்கப்படுகிறது."*

4.0 **<u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>**:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 17.04.2024 அன்று விசாரணை அட்டவணையிடப்பட்டது. பின்னர் மேல்முறையீட்டாளரின் வேண்டுகோளுக்கிணங்க விசாரணை 23.04.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு S.R. ஸ்ரீதர் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு S. பாவநாசம், செயற்பொறியாளர்/ பகிர்மானம்/சிவகாசி, திரு G. முருகேசன், உதவி செயற்பொறியாளர்/நகர்/ வடக்கு/சிவகாசி மற்றும் திரு G. காமராஜ், உதவி மின்பொறியாளர்/ நகர்/ வடக்கு/சிவகாசி, விருதுநகர் மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள்

முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:**

5.1 மேல்முறையீட்டாளர் Pre-Press என்ற தொழிலை சுமார் 36 வருடங்களாகச் செய்து வருவதாகவும், பல அச்சு நிறுவனங்களுக்கு Computer to Plate (CTP), என்ற முறையில் கம்ப்யூட்டர் மூலமாக அலுமினியதகட்டில் அடிக்க வேண்டிய அச்சுப் பகுதியை பதிவேற்றம் செய்து கொடுப்பதாகவும், எந்த அளவு தகட்டில், எத்தனை தகடு பதிவேற்றம் செய்தோம் என்பது அந்த CTP machineல் பதிவாகி தினமும் பிரிண்ட் எடுத்து, நோட்டில் ஆப்பரேட்டர் எழுதிய விபரத்துடன் சரிபார்த்து, மாதம் எவ்வளவு Sq. meter உபயோகிக்கிறோம், wastage எவ்வளவு கணக்கெடுத்துக் கொள்வோம் என்று தெரிவித்துள்ளார்.

5.2 மின்பளு Online UPS, Compressor, Air Conditioner மற்றும் Baking oven ஆகிய machineகள் கொண்டு உள்ளது. காலை 9 மணியிலிருந்து இரவு 7 மணி முதல் 8 மணி வரை இயங்குவதால் அதிக பயன்பாடு, குறைந்த பயன்பாடு இருந்தாலும், மின் பயன்பாடு பெரும்பாலும் அதிக வித்தியாசம் இன்றி ஒரே சீராகவே இருக்கும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு எண். 07239006815 Tariff III B யில் மாட்டி இருந்த மீட்டர் (மீட்டர் நம்பர் 04688810, M. Make – ELSTER, Meter Type: Static Electronic Meter with MD Recorded Facility) கீழ்க்கண்ட விபரப்படி நன்றாகவே இயங்கிக்கொண்டிருந்ததாக தெரிவித்துள்ளார்.

| நாள் | ரீடிங் | பயனீட்டளவு (யூனிட்)(Bi monthly) |
|---|---|---|
| 18/02/2021 | 57900 | – |
| 17/04/2021 | 76990 | 19090 யூனிட் |
| 19/06/2021 | 90090 | 13100 " |
| 16/08/2021 | 3010 | 12920 " |
| 13/10/2021 | 18790 | 15780 " |
| 15/12/2021 | 33530 | 14740 " |
| 15/02/2022 | 52100 | 18570 " |
| 18/04/2022 | 71240 | 19140 " |

5.4 06/2022 மாத ரீடிங் 17-06-2022 அன்று எடுக்கும் போது ரீடிங் 930 என்றும் பயனீட்டளவு 29690 யூனிட் என்றும் எடுத்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும், மீட்டரை பார்த்தால் எடுக்கப்பட்ட ரீடிங் சரியாக இருந்ததாகவும், ஆனால் Display மங்கலாக, லேசாக கருப்படித்து தெரிந்ததாகவும், தங்கள் உபயோகத்தை விட இரண்டு மடங்கு பயனீட்டளவு அதிகமாக இருந்ததாலும், மீட்டரின் Display மங்கலாக இருந்ததாலும், மீட்டரின் தன்மையில் சந்தேகம் அடைந்து, மீட்டரை மாற்றி நல்ல மீட்டர் மாட்ட வேண்டி உதவி மின்பொறியாளர் / நகர் / வடக்கு / சிவகாசி அவர்களை நேரில் சந்தித்து முறையீடு செய்து பின்னர் கடிதம் கொடுத்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மின் நுகர்வோர் மீட்டரின் தன்மை குறித்து சந்தேகம் அடையும் போது (அதாவது மின் இணைப்பில் இது நாள் வரை காட்டாத பயனீட்டளவை காட்டியதாலும், Display மங்கலாக இருந்ததாலும்) மின் வாரியம் அதற்குண்டான கட்டணத்தை வசூல் செய்து கொண்டு, அந்த மீட்டரை கழட்டி விட்டு வேற நல்ல நிலையில் உள்ள மீட்டரை மாட்ட வேண்டும் எனவும், கழட்டிய மீட்டரை ஆய்வு கூடத்திற்கு அனுப்பி ஆய்வு செய்து ஆய்வுகூட அறிக்கை பெற்று, அதன் அடிப்படையில் செயல்பட வேண்டும் எனவும், ஆனால் மின் வாரியம், மீட்டரை கழட்டி ஆய்வுக்கு உட்படுத்த முன் வரவில்லை எனவும், அந்த நேரத்தில் தான் வேலை சம்பந்தமாக, வெளியூர்கள் சென்றுவிட்டதால், 06/2022 மாதம் கூடுதலாக வந்த மின் கட்டணத் தொகையை, மின் துண்டிப்பை தவிர்ப்பதற்க்காக கடைசி நாளில் செலுத்திவிட்டதாகவும், அதன் பின்பும் பல தடவை அலுவலகம் சென்று நேரிடையாகவும், கடிதம் மூலமும் முறையிட்டும், மின் வாரிய அதிகாரிகள் மீட்டரை கழட்டி ஆய்வு கூடத்தில் ஆய்வு செய்யவோ அல்லது வேறு முறையான ஆய்வு மூலமோ மீட்டரை ஆய்வு செய்ய முன் விரவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 தொடர்ந்து 08/2022 மாத ரீடிங் 22-08-2022 அன்று ரீடிங் 33150 ஆகவும் பயனீட்டளவு 32220 யூனிட் ஆகவும் எடுத்து மீண்டும் அதிகமான பயனீட்டளவுக்கே மதிப்பீடு செய்யப்பட்டதாகவும், அடுத்து 10/2022 மாத மதிப்பீட்டின் போது மீட்டர் Display ஒன்றும் தெரியா வண்ணம் புகைந்து விட்டதாகவும், (ஆனால் ஏரியல் பியூஸ் போகவில்லை மேலும் மின்சாரம் மீட்டர் வழியாக தடையின்றி கிடைக்கிறது). 10/2022

மாத மதிப்பீடு கீழ்க்கண்டபடி சராசரி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

| நாள் | ரீடிங் | பயனீட்டளவு (யூனிட்) (Bimonthly) |
|---|---|---|
| 18/04/2022 | 71240 | . |
| 17/06/2022 | 930 | 29690 " |
| 22/08/2022 | 33150 | 32220 " |

29690 + 32220 = 61910/2 = 30955 யூனிட்

5.7 மீட்டரின் தன்மை குறித்து புகார் கொடுத்தும் முறையாக ஆய்வு செய்யாமல் மீட்டர் பழுதடைந்த நிலையில் கூடுதலாக ஓடிய 06/2022, 08/2022 மாத பயனீட்டளவை வைத்தே சராசரி மதிப்பீடு 10/2022 மாதத்திற்கும் LTCT மீட்டர் 14/12/2022 அன்று மாட்டும் வரை தொடர்ந்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மின் இணைப்பு துண்டிக்கப்படக்கூடாது, தொழில் நின்று விடக்கூடாது என்ற காரணத்தாலும், மின் வாரிய மேல் அதிகாரிகளை முறையாக அணுகி நியாயம் பெற்றுக் கொள்ளலாம் என நினைத்து 06/2022, 08/2022 மாதம் மீட்டர் கூடுதலாக பயனீட்டளவு காட்டிய மதிப்பீடு தொகையையும் மேற்படி 06/2022, 08/2022 கூடுதலாக ஓடிய பயனீட்டளவு அடிப்படையில் சராசரி மதிப்பீடு 10/2022 மாதத்திற்கும், 12/2022 மாதத்தில் LTCT மீட்டர் மாட்டும் வரைக்கும் மதிப்பீடு தொகை அனைத்தையும் செலுத்தியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 மன்றம் வழங்கிய ஆணை 4.18 ன் படி, எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர் மின் அளவி அதிக பயன்பாடு காட்டுவதாக புகார் தெரிவித்த போதே மின் அளவியை ஆய்வு செய்ததாகவும், மின் அளவி நன்றாக இருந்ததால், TONG TESTER கொண்டோ, CMRI download செய்ய வேண்டிய அவசியமோ ஏற்படவில்லை என தெரிவித்தது பதிவாகியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 எந்த தேதியில் ஆய்வு செய்தீர்கள், எந்த அடிப்படையில் மின் அளவியை ஆய்வு செய்து மின் பயனீட்டளவு நன்றாக இருந்துள்ளது என்ற முடிவுக்கு வந்தீர்கள் என்பதை

மன்றம் கேட்டு, பதிவு செய்யவில்லை. அவர்கள் செய்த ஆய்வை, நான் ஏற்கனவே மேல் பகுதியில் சொன்ன முறைப்படி, ஆய்வு செய்யாமல், பார்த்த பார்வையில் மின் அளவி ஆய்வு நன்றாக இருக்கிறது என்று சொல்வது ஏற்புடையதல்ல என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 மன்றம் வழங்கிய ஆணை 5.4 ன் படி, மின்அளவி பழுதான காலங்களிலும் அதற்கு முந்தைய காலங்களிலும், Power factor 0.85ல் இருந்து 0.93 வரை மாறுபடாமல் இருக்கிறது என்ற காரணத்தை முன்னிறுத்தியுள்ளதாகவும், ஆனால் பழுதானகாலத்தில் அதாவது 06/2022 மற்றும் 08/2022 காலங்களில் பவர்பேக்டர் 0.87 மற்றும் மிகக்குறைந்த அளவு 0.85 என்று உள்ளதாகவும், அதற்கு முன்னர் 02/2022, 04/2022 காலங்களிலும் 0.93 மற்றும் 0.91 உள்ளதாகவும், புதுமீட்டர் மாட்டிய பிறகு ஒரே சீராக 0.91 முதல் 0.94 வரை எந்தவித External capacitor இல்லாமல் உள்ளதாகவும், ஆகவே Power factor uniform ஆக உள்ளது என்று சொல்வது ஏற்புடையது இல்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.12 மன்றம் வழங்கிய ஆணை 5.6 ன் படி, மனுதாரரின் மின் பளுவும் 02/2022 ம் மாதம் முதலே அனுமதிக்கப்பட்ட மின் பளுவை விட கூடியிருப்பதாலும் 06/2022 மற்றும் 08/2022 ம் மாதங்களில் மின் பயன்பாடும் தொடர்ந்து அதிகமாக இருந்த காரணங்களினாலேயே மின் அளவி புகைந்திருக்கக் கூடும் என கருதப்படுவதாக பதிவாகியுள்ளதாகவும், தங்கள் தொழில் பகுதியில் மின் பளு பயன்பாடு என்பது எப்போதும் சீராகவே இருக்கும் எனவும், ஏற்கனவே பழுதான ஏர் கம்ப்ரஸரை, புதியது மாற்றிவிட்டு பழுதான செட்டை சரி செய்து, அதை விற்பதற்காக வைத்துள்ளதாகவும், அதை வாங்க வேண்டும் என்று வருபவர்களுக்கு அதை சுமார் 1/2 மணி நேரம் ஓட்டி காண்பிப்போம். அதன் காரணமாக உச்சகட்ட மின்பளு 52.04 kw, 53.02 kw என மாற்றம் அடைந்துள்ளதற்கான காரணம் தற்போது அனுமதிக்கப்பட்ட மின்பளு 55 kw ஆக உள்ளது. தங்கள் மின் இணைப்பில் ஏற்கனவேயுள்ள மின் அளவி எத்தனை ஆம்ஸ், அந்த ஆம்ஸ் உள்ள மின் அளவியில் எத்தனை kw வரை இணைந்து பயன்படுத்தலாம் என்பதை கணக்கிடாமல், மின்பளுவும், மின் பயன்பாடும் தொடர்ந்து அதிகமானதால் மின் அளவி புகைத்திருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது என்று யூகத்தின் அடிப்படையில்

சொல்வதை ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.13 மன்றம் வழங்கிய ஆணை 5.7 ன் படி, மின் அளவி பழுதான காலங்களில் சராசரி மின் பயன்பாடு கணக்கிடுவது குறித்து TNERC Supply code விதி எண் 11ல் கீழ்க்கண்டவாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது:

*"Assessment of billing in cases where there is no meter or meter is defective".*

*1) Where supply to the consumer is given without a meter or where the meter fixed is found defective or to have ceased to function and no theft of energy or violation is suspected, the quantity of electricity supplied during the period when the meter was not installed or the meter installed was defective, shall be assessed as mentioned here under.*

*2) The quantity of electricity, supplied during the period in question, shall be determined by taking the average of electricity supplied during the preceeding four months in respect of both high tension service connection and low tension service connection PROVIDED that the conditions in regard to use of electricity during the said four months were not different from those which prevailed during the period in question.*

மேற்கண்ட விதிகளின் படியே 06/2022, 08/2022 மாதம் அதிகமாக காட்டிய பயனீட்டளவை வைத்தே சராசரி பயனீட்டளவு கணக்கிட்டு 10/2022 மாதத்திற்கும் 12/2022 மாதத்திற்கும் (LTCT மீட்டர் மாட்டிய நாள் 14/12/2022 வரை) சராசரி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்று பதிவாகியுள்ளது ஏற்புடையதல்ல என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.14 மன்றம் வழங்கிய ஆணை எண் 6 முடிவுரையின் படி மின் இணைப்பு எண் 07239006815 ற்கு 06/2022 மற்றும் 08/2022 காலகட்டங்களில் விதிக்கப்பட்டுள்ள சராசரி மின் கட்டணம் 10/2022 மற்றும் 12/2022 கணக்கீட்டிற்கு விதிக்கப்பட்டுள்ள சராசரி மின் கட்டணம், அதன் பின்னர் சீராய்வு செய்யப்பட்டு விதிக்கப்பட்டுள்ள கூடுதல் சராசரி மின்கட்டணம் ஆகியவை சரியானதே என்று உத்தரவிட்டு மன்ற மனு எண் 44/2023 இம்மன்றத்தால் முடித்து வைக்கப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.15 மின் வாரியத்தில் பொதுவாக மின் அளவி பழுதானது எந்த நாளில் இருந்து என்பதை பயனீட்டளவின் அடிப்படையில் கண்டறிந்து மின் அளவி பழுதான காலத்திற்கு சராசரி மதிப்பீடு செய்வது மேற்கண்ட ஆணை (TNERC Supply code விதி

எண்.11)யின் படியே செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருந்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

உதாரணமாக (மாடல் கணக்கிடு)

| மாதம் | பயனீட்டளவு (யூனிட்) (Bimonthly) |
|---|---|
| 1/2022 | 6000 யூனிட் |
| 3/2022 | 6100 யூனிட் |
| 5/2022 | 6100 யூனிட் |
| 7/2022 | 6150 யூனிட் |
| 9/2022 | 3800 யூனிட் |
| 16.11.2022 | 3100 யூனிட் |
| 16.01.2023 | Ex.Meter defective |
| 18.01.2023 | Ex.Meter released |
| 18.01.2023 | New Meter fixed |
| 3/2023 | 7000 " |
| 5/2023 | 7500" |
| 7/2023 | 7100" |
| 9/2023 | 7200" |
| 11/2023 | 7400" |

என்று இருந்தால் 1/2023ம் மாதத்திற்கு சராசரி மதிப்பீடு கீழ்க்கண்டபடி,

1) 09/2022, 11 /2022 மாத பயனீட்டளவின் படி,

3800+3100 = 6900 / 2 = 3450 units.

சராசரி 3450 யூனிட்டாக வைத்து மதிப்பீடு செய்வதுண்டு.

2) அவ்வாறு 1ன் படி மதிப்பீடு செய்யப்பட்டதை மின் அளவி 07/2022 ல் இருந்தே பழுதடைந்துள்ளதாக கருதி 09/2022, 11/2022 ன் பயனீட்டளவை வைத்து சராசரி செய்தது தவறு என்று சொல்லி மேல் அதிகாரிகளின் ஆய்வின் படியோ அல்லது தணிக்கை பிரிவின் தணிக்கை சீட்டின் படியோ கீழக்கண்டபடி 01/2023 மாதம் ஏற்கனவே சராசரி மதிப்பீடு செய்ததை திருந்தி மதிப்பீடு செய்யப்படுவதுண்டு.

05/2022, 07/2022 பயனீட்டளவு

6100+ 6150 = 12250/2 =6125 யூனிட்

சராசரி 6125 யூனிட்டாக 01/2023 மாத மதிப்பீடும் மேலும் 09/2022, 11/2022 மாத மதிப்பீடும் சராசரி 6125 யூனிட் வீதம் திருத்தி மதிப்பீடு செய்யப்படும்.

3) நம்பர் 2 ன் படியே ஏற்கனவே மதிப்பீடு செய்திருந்தாலும், அதையும் திருத்தியமைத்து, புதிய மீட்டர் மாட்டிய பின் உள்ள பயனீட்டளவை வைத்து சராசரி மதிப்பீடு செய்யப்படுவதுண்டு.

03/2023, 05/ 2023 பயனீட்டளவு

7000+7500 = 14500/2 = 7250 யூனிட்

சராசரி 7250 யூனிட்டாக 01/2023 மாத மதிப்பீடும் 09/2022, 11/2022 மாத மதிப்பீடும் திருத்தி மதிப்பீடு செய்யப்படுவதுண்டு.

5.16 எல்லாம் மேற்கண்ட TNERC Supply code விதி எண் 11ன் படியே என்று சொல்லப்படுகிறது. மேற்கண்ட செயல்பாடுகளை எதிர்கொண்ட தங்களது சங்க உறுப்பினர்கள் தங்கள் கருத்தை சங்கத்தில் தெரிவித்ததின் அடிப்படையில் தெரிய வந்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.17 மொத்தத்தில், மின் அளவி பழுது என்று சொன்னால், பயனீட்டளவை வைத்து பழுது எந்த நாளில் இருந்து என்று கண்டறிவதே இதன் முக்கிய சராம்சம், தனது மின் இணைப்பில், தான் மின் இணைப்பு வாங்கிய நாள் முதல் LTCT மின் இணைப்பாக 14/12/2022 ல் மாற்றிய பின்பும் இன்று வரை பிரச்சனைக்குரிய மாதம் 06/2022ல் 29690 யூனிட் பயனீட்டளவை போலவும், 08/2022ல் 32220 யூனிட் பயனீட்டளவை போலவும் ஓடியதே இல்லை எனவும், சரியான நேரத்தில் மின் அளவியை முறையாக ஆய்வு செய்து தெளிவு படுத்தியிருந்தால் இந்த பிரச்சனைக்கே இடமில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.18 எனவே மின் இணைப்பில் உள்ள மின் அளவி 18/04/2022 முதல் பழுதடைந்திருக்கலாம் என கருதி சராசசி மதிப்பீடாக

2/2022 – 18750 யூனிட் / Bimonthly

4/2022 – 19140 யூனிட் / Bimonthly

18750 + 19140 = 37710/2 = 18855 யூனிட்

சராசரி மதிப்பீடாக 18855 யூனிட்டை (Bimonthly) வைத்து 06/2022 முதல் 12/2022 (LTCT மீட்டர் மாட்டிய நாள் வரை) சீராய்வு மதிப்பீடு செய்து, அக்காலங்களில் அதிகமாக செலுத்திய தொகையை எதிர் வரும் மதிப்பீட்டில் கழித்துக் கொடுக்க வேண்டுமென மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.19 சிவகாசி தொழில் செய்வோர்கள் கூட்டு கூட்டத்தில் இது சம்மந்தமாக பேசும் போது, சங்க உறுப்பினர்கள் சிலர் சொன்ன கருத்து, கூடுதலாக (மின் அளவி பழுது) மதிப்பீடு செய்த 06/2022 மாத மின்கட்டணம் செலுத்தாமல், மின் அளவி ஆய்வு செய்து அறிக்கை கொடுக்கும் வரை செலுத்தாமல் இருக்க நீதி மன்றத்தில் தடை ஆணை வாங்கி மின்வாரியத்தில் கொடுத்து விடு என்றார்கள். எனக்கு அதில் உடன்பாடு இல்லை. அதனால் மேற்படி காலத்தில் கூடுதலாக மதிப்பீடு செய்த தொகை அனைத்தையும் செலுத்திவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.20 தாம் தொழில் செய்து பிழைப்பதற்கு மின்வாரியம் தான் மின்சாரம் கொடுக்கிறது எனவும், தாம் மின்வாரியத்தையும், மின்வாரிய அதிகாரிகளையும் மதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தம்முடைய குறைகளையும், நியாயத்தையும் மின்வாரிய அதிகாரிகளிடம் வழி முறையாக முறையிட்டால் நியாயம் கிடைக்கும் என நம்புவதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்:</u>**

6.1 மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு எண்: 239–006–815 TF –III B அனுமதிக்கப்பட்ட மின் பளுவானது 49.8 KW லிருந்து கூடுதலாக 2 முறை பதிவானதால் 24/02/2022 அன்று 55 KW ஆக மின் பளு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், 10/2022 கணக்கீட்டில் மின் அளவி பழுது ஏற்பட்டதால் 06/2022, 08/2022 மாதங்களில் பதிவான பயனீட்டு அளவுகள் வைத்து சராசரி மின் கட்டணம் விதிக்கப்பட்டு மேல்முறையீட்டாளர் ஆட்சேபனையுடன் செலுத்தியுள்ளதாகவும், தற்சமயம் உள்ள வாரிய விதிமுறைகளின்படி 50 KW மேல் அனுமதிக்கப்பட்ட மின் பளு உள்ளதால் மேல்முறையீட்டாளருக்கு 14.12.2022 அன்று மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு Whole Current மின் இணைப்பிலிருந்து LTCT மின் இணைப்பாக மாற்றம் செய்யப்பட்டதாகவும், அதாவது இரு மாதங்களுக்கு ஒரு முறை செலுத்தப்பட்ட மின்

கட்டண முறை மாறி மாதந்திர மின் கட்டணம் செலுத்தும் விதமாக மாற்றம் செய்யப்பட்டதாகவும், 12/2022 கணக்கீடானது 31/12/2022 ல் கணினியில் 22356.1 UNIT – க்கு கணக்கீடு ஆகியுள்ளதாகவும், அதற்குரிய கட்டணத்தை செலுத்தியுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேற்கண்ட கணக்கீட்டினை சிவகாசி மதிப்பீட்டு அலுவலரால் சீராய்வு செய்ய க.எண்.செபொ/ப/சிவ/கோ.மி.அ/அ.எண்;219/23 நாள்;27-01-2023 நாளிட்ட கடிதத்தின் படி 20/10/2022 முதல் 13/12/2022 வரை 54 நாட்களுக்கு விடுபட்ட மின் கட்டணம் ரூ.97901/- மட்டும் செலுத்த உதவி மின் பொறியாளர் / நகர் / வடக்கு / சிவகாசி மூலம் தெரிவிக்கப்பட்டதாகவும், க.எண்.உ செபொ/ந/சிவ/ கோ.MRT/ அ.எண்;540/23 நாள்; 05-07-2023 நாளிட்ட கடிதத்தின் படி மின் அளவி ஆய்வகத்திற்கு Reading பதிவிறக்கம் செய்வதற்காக அனுப்பப்பட்டதாகவும், க.எண்; 20/11/2023 நாளிட்ட MRT ஆய்வறிக்கை படி உதவி செயற்பொறியாளர் மின் அளவி ஆய்வகம் விருதுநகர் அவர்கள் மின் அளவியிலிருந்து Reading ஐ பதிவிறக்கம் செய்ய இயலவில்லை என அறிக்கை அளித்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

20/10/2022: Ave 30955 Unit Rs.253866/-

14/12/2022: IR 2.35 New CT Meter Fixed

31/12/2022: Reading 181.97 – 22358.6 Unit – Rs.193518 /-

CT மின் அளவியில் Recorded Unit: 5388.6 Units

6.3 14/12/2022 முதல் 31/12/2022 வரை பதிவாகியுள்ள மின் பயனீட்டு அளவு 181.97 – 2.35 = 179.62 X 30 = 5388.6 Unit 20/10/2022 முதல் 13/12/2022 வரை 54 நாட்களுக்கு ஏற்கனவே மேல்முறையீட்டாளருக்கு சராசரி நிர்ணயிக்கப்பட்டுள்ள பயனீட்டு அளவுகள் வைத்து 27859.5 Unit சேர்த்து 33248.1 Unit மறுகணக்கீடு மதிப்பீட்டு அலுவலரால் செய்யப்பட்டுள்ளதால் மேல்முறையீட்டாளர் செலுத்திய தொகை போக மீதம் ரூ.97901/- செலுத்த கோரியுள்ளது சரியானது தான் எனவும், CMRI Device மூலமாக மின் அளவியின் Reading ஐ பதிவிறக்கம் செய்ய இயலாத காரணத்தினால் கட்டணத்தை மேல்முறையீட்டாளர் கோரியவாறு Bill Revise செய்ய இயலவில்லை எனவும், எனவே மேல்முறையீட்டாளருக்கு மேற்கண்ட தொகையை செலுத்தும்படி தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மன்றம் வழங்கிய ஆணை எண் 4.18 ன் படி, 06/2022 கணக்கீட்டு மாதத்தின் பயனீட்டளவு அதிகமாக வந்தது குறித்து மேல்முறையீட்டாளர் எழுத்துப்பூர்வமாக மின் கட்டணம் செலுத்துவதற்கு முன்பாக மனு ஏதும் அளிக்கவில்லை எனவும், 03/08/2022 அன்று உதவி மின் பொறியாளர் / நகர்/ வடக்கு /சிவகாசி அவர்களிடம் 06/2022 மாத மின் கட்டணம் வழக்கமான மின் கட்டணத்தை போன்று இரு மடங்கு வந்துள்ளதாகவும், ஆனால் வழக்கமான பணியில் 70% மட்டுமே பணிகள் நடைபெற்றதாகவும் தெரிவித்து மின் அளவியில் Display Not Normal என்றும் கூடுதலாக செலுத்திய மின் கட்டணத்தை திரும்பக் கோரியும் மனு அளித்துள்ளதாகவும், இதுகுறித்து அப்போதைய உதவி மின் பொறியாளர் மின் இணைப்பை ஆய்வு செய்து மின் அளவி நல்ல நிலையில் உள்ளது என்று மேல்முறையீட்டாளரிடம் நேரில் தெரிவித்துள்ளதாக கூறியதாகவும், ஆனால் ஆய்வு செய்த விபரம் கணினியில் பதிவேற்றம் செய்யப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மன்றம் வழங்கிய ஆணை எண் 5.4 ன் படி, மின்னளவியில் பதிவாகியுள்ள KWH மற்றும் KVAH Reading ஏதாவது தவறு இருந்தால் PF சரியாக இருக்காது ஆனால் PF சரியாக இருந்ததால் மின்னளவி சரியாக உள்ளது எனவும் மன்றத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மன்றம் வழங்கிய ஆணை எண் 5.6ன் படி, மேற்கண்ட மின் இணைப்பில் LTCT SC ஆக மாறுவதற்கு முன்பாக இருந்த மின்னளவி MAKE : ELSTER, Capacity : 50–100A, Serial No : 04688810 எனவும், மேல்முறையீட்டாளருக்கு அனுமதிக்கப்பட்ட மின் பளுவான 49.8W லிருந்து கூடுதலாக இரண்டு முறை மின் பளு கூடுதலாக பதிவானதால் 24/02/2022 அன்று 55 KW ஆக மின்பளு பதிவேற்றம் செய்யப்பட்டதாகவும், மேலும் மேல்முறையீட்டாளர் மின் இணைப்பில் 120.9 kW மின் பளுவை இணைத்து வைத்துள்ளதாகவும், மேலும் மேல்முறையீட்டாளரே தனது மின் இணைப்பில் ஒரு ஏர் கம்ப்ரசர் பழுதானதாகவும் அதற்குப் பதிலாக புதிய ஏர் கம்ப்ரசர் பொருத்திவிட்டதாகவும், பழைய ஏர் கம்ப்ரசரை விற்பதற்காக அதை வாங்க வருபவர்களிடம் 1/2 மணி நேரம் இயக்கி காண்பித்ததால்தான் அனுமதிக்கப்பட்ட மின்பளுவை விட கூடுதலாக MD வந்ததற்கு காரணம் என்று தெரிவித்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 மேலும் மேல்முறையீட்டாளர் அனுமதிக்கப்பட்ட மின் பளுவை விட மிகவும் அதிகமாக 120.9 KW மின்பளு மின் இணைப்பில் பொருத்தியுள்ளதாகவும், மின்னளவியில் 1/2 மணி நேரம் தொடர்ந்து எந்த மின்பளு பயன்பாட்டில் உள்ளதோ அந்தப் பளுவைத்தான் உச்சகட்ட மின் பளுவாக பதிவு செய்யும் எனவே கூடுதலாக மின்பளுவை 30 நிமிடத்திற்கு குறைவாக பயன்படுத்தினால் MD ஆக பதிவு செய்யாது எனவும், ஆகையால் கூடுதல் மின்பளுவின் காரணமாக மின்பளு பயன்படுத்தியதாலும் மின் அளவி புகைந்திருக்கலாம் என்று உறுதி செய்யப்படுகிறதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மன்றம் வழங்கிய ஆணை எண் 5.7ன் படி 10/2022 மாதத்திற்க்கு சராசரி மின் கட்டணம் TNERC SUPPLY CODE 11.2 ன் படி உதவி செயற்பொறியாளர் நகர் சிவகாசி அவர்களின் அனுமதியின் படி சராசரி மின் கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டு மின் கட்டணம் வசூல் செய்யப்பட்டதாகவும், 06/2022, 08/2022 ஆகிய கணக்கீட்டு மாதங்களில் நுகர்வோரால் பயன்படுத்தப்பட்ட பயனீட்டளவுக்கு மின் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், 02/11/2022 அன்று செயற்பொறியாளர்/பகிர்மானம்/ சிவகாசி அவர்களிடம் புகார் மனு கொடுத்து அதன் பிறகு 50–KW க்கு மேல் உள்ளதால் LTCT மின் இணைப்பாக 14/12/2022 ல் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், LTCT மின் இணைப்பாக மாறுவதற்கு முன்பு இரண்டு மாதங்களுக்கு சராசரியாக 19000 யூனிட்டுகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், LTCT மின் இணைப்பாக மாற்றம் செய்யப்பட்ட பின்பு ஒரு மாதத்திற்க்கு சராசரியாக 7500 யூனிட்டுகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், 10/2022 மாதத்தில் கம்ப்ரஸர் பழுது ஏற்பட்டு அதன் மூலம் அனுமதிக்கப்பட்ட மின்பளுவை விட கூடுதலான மின்பளு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது தெரியவருவதாகவும், எனவே TNERC SUPPLY CODE ; 11.2 ன் படி சராசரி மின் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 மன்றம் வழங்கிய ஆணை எண்5.8 ன் படி, 10/2022 ல் சராசரி மின் கட்டணம் 30955 – யூனிட்களுக்கு மின் கட்டணம் செலுத்தப்பட்டதாகவும், 14/12/2022 அன்று மின் இணைப்பு CT மீட்டர் பொருத்தி CT மின் இணைப்பாக மாற்றப்பட்டுள்ளதாகவும், 31/12/2022 அன்று கணக்கீட்டின் போது கணினியில் சராசரி மின் கட்டணம் 02/2022, 04/2022ல் பதிவான பயனீட்டளவை வைத்து சராசரி கணக்கிடப்பட்டு 22358.6

யூனிட்களுக்கு 193518/- மட்டும் நுகர்வோர் செலுத்தி உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 சிவகாசி கோட்ட மதிப்பீட்டு அலுவலர் அவர்கள் உதவிசெயற்பொறியாளர்/நகர்/ சிவகாசி அவர்களால் ஏற்கனவே 10/2022 மாத சராசரி கணக்கீட்டின் அடிப்படையில் மேற்கண்ட 12/2022 மின் கட்டணத்தை மறுசீராய்வு செய்து ரூ.97,901/- செலுத்த நுகர்வோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.11 06/2022, 08/2022 ஆகிய கணக்கீட்டு மாதங்களில் மின் அளவியில் பதிவாகியுள்ள மின் பயனீட்டளவுகள் வைத்து மின் கட்டணம் வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே மேல்முறையீட்டாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க செலுத்திய மின் கட்டணத்தை திருத்தி அமைக்க இயலாது எனவும், மேலும் 12/2022 ல் கணக்கீடு செய்யப்பட்ட மின்கட்டணத்தில் விடுபட்ட குறைவுத்தொகை ரூ.97,901/- மேல்முறையீட்டாளர் இத்தொகையை செலுத்த வேண்டி உத்தரவிடுமாறு எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>**

7.1 மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினாலும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து பார்க்கும் பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

1. மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பில் பொருத்தப்பட்டுள்ள மின்அளவி எப்பொழுது பழுதடைந்தது?
2. மின்அளவி பழுதான நிலையில் மின் பயன்பாட்டிற்கு பின்பற்றப்பட்ட சராசரி கணக்கீடு சரியா?

**8.0 <u>வழக்கெழு வினா 1-ற்கான தீர்வு:</u>**

8.1 மேல்முறையீட்டாளர் Pre-Press என்ற தொழிலை சுமார் 36 வருடங்களாகச் செய்து வருவதாகவும், தனது மின் இணைப்பு எண். 07239006815 Tariff III B யில் மாட்டி இருந்த மீட்டர் (மீட்டர் நம்பர் 04688810, M. Make - ELSTER, Meter Type: Static Electronic Meter with MD Recorded Facility) நன்றாகவே இயங்கி கொண்டிருந்ததாகவும், 06/2022

மாத ரீடிங் 17–06–2022 அன்று எடுக்கும் போது ரீடிங் 930 என்றும் பயனீட்டளவு 29690 யூனிட் என்றும் மதிப்பீடு செய்யப்பட்டதாகவும், இது தங்கள் உபயோகத்தை விட இரண்டு மடங்கு பயனீட்டளவு அதிகமாக இருந்ததாகவும், தொடர்ந்து 08/2022 மாத ரீடிங் 22–08–2022 அன்று ரீடிங் 33150 ஆகவும் பயனீட்டளவு 32220 யூனிட் ஆகவும் மீண்டும் அதிகமான பயனீட்டளவுக்கே மதிப்பீடு செய்யப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

8.2 மீட்டரை பார்த்தால் எடுக்கப்பட்ட ரீடிங் சரியாக இருந்ததாகவும், ஆனால் Display மங்கலாக, லேசாக கருப்படித்து தெரிந்ததாகவும், மீட்டரின் Display மங்கலாக இருந்ததால் மீட்டரின் தன்மையில் சந்தேகம் அடைந்து மீட்டரை மாற்றி நல்ல மீட்டர் மாட்ட வேண்டி உதவி மின்பொறியாளர் / நகர் / வடக்கு / சிவகாசி அவர்களை நேரில் சந்தித்து முறையீடு செய்து பின்னர் கடிதம் கொடுத்ததாகவும், அடுத்து 10/2022 மாத மதிப்பீட்டின் போது மீட்டர் Display ஒன்றும் தெரியா வண்ணம் புகைந்து விட்டதாகவும், ஆனால் ஏரியல் பியூஸ் போகவில்லை மேலும் மின்சாரம் மீட்டர் வழியாக தடையின்றி கிடைத்தாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

8.3 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் 06/2022 கணக்கீட்டு மாதத்தின் பயனீட்டளவு அதிகமாக வந்தது குறித்து மேல்முறையீட்டாளர் எழுத்துப்பூர்வமாக மின் கட்டணம் செலுத்துவதற்கு முன்பாக மனு ஏதும் அளிக்கவில்லை எனவும், 03/08/2022 அன்று உதவி மின் பொறியாளர் / நகர்/ வடக்கு /சிவகாசி அவர்களிடம் 06/2022 மாத மின் கட்டணம் வழக்கமான மின் கட்டணத்தை போன்று இரு மடங்கு வந்துள்ளதாகவும், ஆனால் வழக்கமான பணியில் 70% மட்டுமே பணிகள் நடைபெற்றதாகவும் தெரிவித்து மின் அளவியில் Display Not Normal என்றும் கூடுதலாக செலுத்திய மின் கட்டணத்தை திரும்பக் கோரி மனு அளித்துள்ளதாகவும், இதுகுறித்து அப்போதைய உதவி மின் பொறியாளர் மின் இணைப்பை ஆய்வு செய்து மின் அளவி நல்ல நிலையில் உள்ளது என்று மேல்முறையீட்டாளரிடம் நேரில் தெரிவித்துள்ளதாகவும், ஆனால் ஆய்வு செய்த விபரம் கணினியில் பதிவேற்றம் செய்யப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

8.4 மேல்முறையீட்டாளரின் கடிதத்தில் தன்னுடைய மின்அளவி சரியாக செயல்படுவதாகவும், ஆனால் அதன் display சரியாக தெரியவில்லை என தெரிவித்துள்ளார். மேற்கூறிய மின் அளவி உரிமதாரரால் கள ஆய்வு நடத்தி மின்அளவியின் செயல்பாடு சரியாக இருப்பதாக மேல்முறையீட்டாளரிடம் தெரிவிக்கப்பட்டதா என வினவியபோது அதனை மேல்முறையீட்டாளர் மறுக்கவில்லை. மேலும் தன்னுடைய மின் திறன் காரணி 06/2022 மற்றும் 08/2022 காலங்களில் குறைவாக 0.87 மற்றும் 0.85 ஆக இருந்ததாகவும் அது 02/2022 மற்றும் 04/2022–இல் 0.93 மற்றும் 0.92 ஆக இருந்ததைவிட குறைவாக பதிவாகியிருப்பதால் மின் அளவி பழுது என்று வாதிட்டார்.

8.5 இந்நிலையில் மின் திறன் காரணி குறித்து தமிழ்நாடு மின் வழங்கல் விதியின் தாழ்வழுத்த மின் இணைப்பிற்கு கூறப்பட்டதன்படி 0.85 கீழே வராமல் மேல்முறையீட்டாளர் தன்னுடைய பயன்பாடு உபகரணங்களை உரிய திறனுடன் பயன்படுத்த வேண்டும். அதாவது, 0.85–க்கு கீழ் மின் திறன் காரணி குறைந்தால் அபராதம் செலுத்த வேண்டும் என்று உள்ளதே தவிர அத்தகைய மின்திறன் காரணி குறைவினால் மின் அளவி பழுது என்ற மேல்முறையீட்டாளரின் வாதம் நிராகரிக்கப்படுகிறது. மேல்முறையீட்டாளரின் வளாகத்தில் உபகரணங்களான Motor, coil, விளக்குகள் பயன்பாடு அதிகமாக இருந்தால் மின்திறன் காரணி குறைய வாய்ப்புள்ளது.

8.6 மேல்முறையீட்டாளர் தன்னுடைய அனுமதிக்கப்பட்ட மின்பளு 49.8KW–ஆக இருந்த காலத்திலேயே 24.02.2022–இல் 55 KW பதிவானதும் மின் நுகர்வோர் பேரேட்டின் மூலம் அறியமுடிகிறது. மேலும் மேல்முறையீட்டாளரின் வளாகத்தில் 120.9 KW–க்கான இயந்திரம் மற்றும் உபகரணங்கள், கருவிகள் பயன்படுத்துவது எதிர்மனுதாரரின் ஆவணங்களின் மூலம் தெரியவருகிறது. இதனை மேல்முறையீட்டாளரும் மறுக்கவில்லை. மேலும், மேல்முறையீட்டாளரும் தங்களுடைய மின் பளு compressor, baking oven மற்றும் இதர உபகரணங்கள் கொண்டு தொடர்ந்து காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை இயங்குவதாக தெரிவித்துள்ளார். இந்நிலையில் தன்னுடைய பழுதான air compressor–ஐ சரிசெய்து அதை வாங்க வருபவருக்கு அரை மணி நேரம் ஓட்டி காண்பிப்பதன் விளைவாக உச்சகட்ட மின்

தேவை உயர்ந்து இருக்கலாம் என தெரிவித்துள்ளார். இருந்தாலும் அது தற்சமயம் அவருடைய மின்பளு 53KW உள்ளது என்ற வாதத்தில் மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின்பயன்பாடு 06/2022 மற்றும் 08/2022 மாதங்களில் கூடுதலாக பதிவானதால் மின் அளவி பழுது என்ற வாதத்திற்கு பொருந்தாத வாதமாக கருதுகிறன்.

8.7 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் அனுமதிக்கப்பட்ட மின் பளுவானது 49.8 KW லிருந்து கூடுதலாக 2 முறை பதிவானதால் 24/02/2022 அன்று 55 KW ஆக மின் பளு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், 10/2022 ல் கணக்கீட்டில் மின் அளவி பழுது ஏற்பட்டதால் 06/2022, 08/2022 மாதங்களில் பதிவான பயனீட்டு அளவுகள் வைத்து சராசரி மின் கட்டணம் விதிக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

8.8 எனவே, மின் அளவி பழுதான காலங்களை அறிய எதிர்மனுதாரரின் ஆவணங்களை ஆய்வு செய்ததில் எதிர்மனுதாரர் தன்னுடைய மின் அளவி பழுது பதிவு பேரேட்டில் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் உள்ள மின் அளவி 10/2022 மாதம் பழுது என்று பதிவு செய்துள்ளார். ஆகவே, இந்நிலையில் மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பில் இருந்த மின்அளவியின் நிலை குறித்து அறிய நான் Evidence Act, 1872 section 35 விதியை ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"35. Relevancy of entry in public record or an electronic record made in performance of duty. An entry in any public or other official book, register or record or an electronic record stating a fact in issue or relevant fact and made by a public servant in the discharge of his official duty or by any other person in performance of a duty specially enjoined by law of the country in which such book, register or record or an electronic record is kept is a relevant fact."*

மேற்கூறிய சான்று சட்டத்தின் படி எந்தவொரு அரசாங்க பதிவும் நாட்டின் சட்டத்தின் கீழ் சாட்சியாகும் என தெரியவருகிறது. எதிர்மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் வாயிலாக (Meter Defect Register) மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பிலிருந்த மின்அளவி 10/2022 மாதத்தில் தான் பழுதானது என்பது உறுதி செய்யப்படுகிறது.

**9.0 <u>வழக்கெழு வினா 2–ற்கான தீர்வு:</u>**

9.1 மேல்முறையீட்டாளர் தங்கள் தொழில் பகுதியில் மின் பளு பயன்பாடு என்பது எப்போதும் சீராகவே இருக்கும் எனவும், ஏற்கனவே பழுதான ஏர் கம்ப்ரஸரை, புதியதாக

மாற்றிவிட்டு பழுதான அளகை சரி செய்து, அதை விற்பதற்காக வைத்துள்ளதாகவும், அதை வாங்க வேண்டும் என்று வருபவர்களுக்கு அதை சுமார் 1/2 மணி நேரம் ஓட்டி காண்பிப்பதாகவும், அதன் காரணமாக உச்சகட்ட மின்பளு 52.04 kw, 53.02 kw என மாற்றம் அடைந்துள்ளதற்கான காரணமாகலாம் எனவும் மேல்முறையீட்டாளர் கூறினார்.

9.2 மின் அளவி பழுதான காலங்களில் சராசரி மின் பயன்பாடு கணக்கிடுவது குறித்து TNERC Supply code விதி எண் 11ல் அறிவுறுத்தப்பட்டவாறு 06/2022, 08/2022 மாதம் அதிகமாக காட்டிய பயனீட்டளவை வைத்தே சராசரி பயனீட்டளவு கணக்கிட்டு 10/2022 மாதத்திற்கும் 12/2022 மாதத்திற்கும் (LTCT மீட்டர் மாட்டிய நாள் 14/12/2022 வரை) சராசரி மதிப்பீடு செய்யப்பட்டதும் அதன் பின்னர் சீராய்வு செய்யப்பட்டு விதிக்கப்பட்டுள்ள கூடுதல் சராசரி மின் கட்டணம் ஏற்புடையதல்ல என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

9.3 தனது மின் இணைப்பில், தான் மின் இணைப்பு வாங்கிய நாள் முதல் LTCT மின் இணைப்பாக 14/12/2022 ல் மாற்றிய பின்பும் இன்று வரை பிரச்சனைக்குரிய மாதம் 06/2022ல் 29690 யூனிட் பயனீட்டளவை போலவும், 08/2022ல் 32220 யூனிட் பயனீட்டளவை போலவும் ஓடியதே இல்லை எனவும் எனவே மின் இணைப்பில் உள்ள மின் அளவி 18/04/2022 முதல் பழுதடைந்திருக்கலாம் என கருதி சராசரி மதிப்பீடாக

2/2022 – 18750 யூனிட் / Bimonthly

4/2022 – 19140 யூனிட் / Bimonthly

18750 + 19140 = 37710/2 = 18855 யூனிட்

அதாவது 18855 யூனிட்டை (Bimonthly) வைத்து 06/2022 முதல் 12/2022 (LTCT மீட்டர் மாட்டிய நாள் வரை) சீராய்வு மதிப்பீடு செய்து, அக்காலங்களில் அதிகமாக செலுத்திய தொகையை எதிர் வரும் மதிப்பீட்டில் கழித்துக் கொடுக்க வேண்டுமென மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

9.4 மேல்முறையீட்டாளருக்கு அனுமதிக்கப்பட்ட மின் பளுவான 49.8W லிருந்து கூடுதலாக இரண்டு முறை மின் பளு கூடுதலாக பதிவானதால் 24/02/2022 அன்று 55 KW ஆக மின்பளு பதிவேற்றம் செய்யப்பட்டதாகவும், மேலும் மேல்முறையீட்டாளர் மின் இணைப்பில் 120.9 kW மின் பளுவை இணைத்து வைத்துள்ளதாகவும், மேலும்

மேல்முறையீட்டாளரே தனது மின் இணைப்பில் ஒரு ஏர் கம்ப்ரசர் பழுதானதாகவும் அதற்குப் பதிலாக புதிய ஏர் கம்பரசர் பொருத்திவிட்டதாகவும், பழைய ஏர் கம்ப்ரசரை விற்பதற்காக அதை வாங்க வருபவர்களிடம் 1/2 மணி நேரம் இயக்கி காண்பித்ததால்தான் அனுமதிக்கப்பட்ட மின்பளுவை விட கூடுதலாக MD வந்ததற்கு காரணம் என்று தெரிவித்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

9.5 மேலும் மேல்முறையீட்டாளர் அனுமதிக்கப்பட்ட மின் பளுவை விட மிகவும் அதிகமாக 120.9 KW மின்பளு மின் இணைப்பில் பொருத்தியுள்ளதாகவும், மின்னளவியில் 1/2 மணி நேரம் தொடர்ந்து எந்த மின்பளு பயன்பாட்டில் உள்ளதோ அந்தப் பளுவைத்தான் உச்சகட்ட மின் பளுவாக பதிவு செய்யும் எனவே கூடுதலாக மின்பளுவை 30 நிமிடத்திற்கு குறைவாக பயன்படுத்தினால் MD ஆக பதிவு செய்யாது எனவும், ஆகையால் கூடுதல் மின்பளுவின் காரணமாக மின்பளு பயன்படுத்தியதாலும் மின் அளவி புகைந்திருக்கலாம் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

9.6 நுகர்வோர் பேரேட்டின்படி 06/2022, 08/2022 ஆகிய கணக்கீட்டு மாதங்களில் நுகர்வோரால் பயன்படுத்தப்பட்ட பயனீட்டளவுக்கு மின் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், 10/2022 மாதத்திற்கு சராசரி மின் கட்டணம் TNERC SUPPLY CODE 11.2 ன் படி வசூல் செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது. 10/2022 மாத மதிப்பீடு கீழ்க்கண்டபடி சராசரி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

| நாள் | ரீடிங் | பயனீட்டளவு (யூனிட்) (Bimonthly) |
|---|---|---|
| 18/04/2022 | 71240 | . |
| 17/06/2022 | 930 | 29690 " |
| 22/08/2022 | 33150 | 32220 " |

29690 + 32220 = 61910/2 = 30955 யூனிட்

9.7 10/2022 ல் சராசரி மின் கட்டணம் 30955 – யூனிட்களுக்கு மின் கட்டணம் செலுத்தப்பட்டதாகவும், 14/12/2022 அன்று மின் இணைப்பு CT மீட்டர் பொருத்தி CT மின் இணைப்பாக மாற்றப்பட்டுள்ளதாகவும், 31/12/2022 அன்று கணக்கீட்டின் போது கணினியில் சராசரி மின் கட்டணம் 02/2022, 04/2022ல் பதிவான பயனீட்டளவை வைத்து சராசரி கணக்கிடப்பட்டு 22358.6 யூனிட்களுக்கு 193518/– மட்டும் நுகர்வோர்

செலுத்தி உள்ளதாகவும், சிவகாசி கோட்ட மதிப்பீட்டு அலுவலர் அவர்கள் உதவிசெயற்பொறியாளர்/நகர்/ சிவகாசி அவர்களால் ஏற்கனவே 10/2022 மாத சராசரி கணக்கீட்டின் அடிப்படையில் மேற்கண்ட 12/2022 மின் கட்டணத்தை மறுசீராய்வு செய்து ரூ.97,901/- செலுத்த நுகர்வோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

9.8 14/12/2022 முதல் 31/12/2022 வரை பதிவாகியுள்ள மின் பயனீட்டு அளவு 181.97 – 2.35 = 179.62 X 30 = 5388.6 Unit 20/10/2022 முதல் 13/12/2022 வரை 54 நாட்களுக்கு ஏற்கனவே மேல்முறையீட்டாளருக்கு சராசரி நிர்ணயிக்கப்பட்டுள்ள பயனீட்டு அளவுகள் வைத்து 27859.5 Unit சேர்த்து 33248.1 Unit மறுகணக்கீடு மதிப்பீட்டு அலுவலரால் செய்யப்பட்டுள்ளதால் மேல்முறையீட்டாளர் செலுத்திய தொகை போக மீதம் ரூ.97901/- செலுத்த கோரியுள்ளது சரியென எதிர்மனுதாரர் வாதிட்டார்.

9.9 மேற்கூறிய வாதி பிரதிவாதியின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் நுகர்வோர் பேரேட்டை ஆய்வு செய்ததில் 06/2020-இல் 54.5 KW பயன்படுத்தியதும் 02/2022-இல் 51.63 KW பயன்படுத்திய நிலையில் 24.02.2022-இல் அவரது உட்சபட்ச தேவை 55KW வரை முறைப்படுத்திய பொழுதும் அச்செயல் விதிக்கு மீறி மின் அளவி Non-CT Meter (whole current meter) ஆகவே வரைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதித் தொகுப்பு 26 (1)(c)-இல் அறிவிக்கப்பட்டுள்ள விளக்கத்தின்படி மின்பளு 50KW-க்கு மேல் மேற்படுமானால் whole current meter-க்கு பதிலாக LTCT meter அதாவது தாழ்வழுத்த மின்மாற்றி மின் அளவீட்டின் மூலம்தான் வரையறை செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது whole current meter-ஆக பயன்படுத்திவந்தது அறியமுடிகிறது.

9.10 மின்பயனீட்டாளரின் மின்பளு தேவை அதிகம் இருக்கும்பட்சத்தில் சரியான மின்அளவி பொருத்தாத நிலையிலும் மேலும் மேல்முறையீட்டாளரின் வளாகத்தில் மின்தேவை எப்பொழுதும் தொடர்ந்து காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை பயன்பாடு இருப்பதை தெரிவித்த நிலையிலும், மேலும் மேல்முறையீட்டாளர் தன்னுடைய பழுதான Air compressor-ஐ சரிசெய்து விற்பனைக்காக வாங்க வருபவர்களிடம் அரை மணி நேரத்திற்கும் மேலாக செயல் விளக்கம் செய்த நிலையிலும் மின்பளு அதிகமாக

இருக்கலாம் என ஒப்புக் கொண்ட நிலையிலும், மேற்கூறிய பத்திகளின் கண்டுப்பிடிப்புகளின் அடிப்படையில் மின்அளவி 10/2022 மாதத்திற்கு பிறகுதான் பழுதான நிலையில் மேல்முறையீட்டாளர் கோரும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு விதி 11(4) மற்றும் 11(5)–இன்படி மின்னளவி பழுதான காலத்திற்குண்டான சராசரி பயன்பாடு கணக்கீடு கோரும் கோரிக்கை சரியானதாக இல்லை.

9.11 ஆகவே, எதிர்மனுதாரர் கணக்கீடு செய்த தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு விதி 11(2) –இன் அடிப்படையில் மேற்முறையீட்டாளரின் மின்பயன்பாடு தொடர் தேவையின் அடிப்படையில் இருப்பதால் 10/2022 மாதத்திற்கு பிறகு மின் அளவி பழுது என்று அறிந்த நிலையில் 06/2022 மற்றும் 08/2022–இன்படி சராசரி கணக்கீடு செய்தது சரியே என தீர்வு செய்யப்படுகிறது. இந்நிலையில் மேல்முறையீட்டாளர் செலுத்திய 25% தொகை போக மீதமுள்ள சராசரி கணக்கீடுக்கான தொகையும் மற்ற நிலுவைத் தொகைகள் ஏதேனும் இருந்தால் மேல்முறையீட்டாளரிடமிருந்து வசூலிக்குமாறு எதிர்மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

## 10.0 <u>முடிவுரை</u>:

10.1 மேற்கூறிய கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் மின் இணைப்பு எண் 239–006–815–இல் பொருத்தப்பட்ட மின்னளவியானது 10/2022 மாதம் பழுதடைந்ததால் TNERC SUPPLY CODE 11.2–ன் படி 06/2022 மற்றும் 08/2022 மாதங்களில் பதிவான பயனீட்டு அளவுகளை வைத்து சராசரி மின் கட்டணம் விதிக்கப்பட்டது சரியே என முடிவு செய்யப்படுகிறது. எனவே மேல்முறையீட்டாளர் ஏற்கனவே செலுத்திய 25% தொகை போக மீதமுள்ள சராசரி கணக்கீட்டிற்கான தொகையும் மற்ற நிலுவைத் தொகைகள் ஏதேனும் இருந்தால் மேல்முறையீட்டாளரிடமிருந்து வசூலிக்குமாறு எதிர்மனுதாரருக்கு உத்தரவிடப்படுகிறது.

10.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 12/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

பெறுநர்:

1. திரு A.S. இராஜசேகரன், – By RPAD
S/o. M.S.A. செந்தியப்ப நாடார்,
D.No. 678 ஞானகிரி ரோடு, சிவகாசி – 626 189,
விருதுநகர் மாவட்டம்.

2. செயற்பொறியாளர்/ பகிர்மானம்/சிவகாசி,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
O/o. செயற்பொறியாளர் /பகிர்மானம்,
பெல் ஓட்டல் அருகில், சிவகாசி – 626 123.

3. உதவி செயற்பொறியாளர்/நகர்/ வடக்கு/சிவகாசி,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
O/o. உதவி மின்பொறியாளர்/பகிர்மானம்,
பெல் ஓட்டல் அருகில், சிவகாசி – 626 123.

4. உதவி மின்பொறியாளர்/ நகர்/ வடக்கு/சிவகாசி,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
O/o. உதவி மின் பொறியாளர்/ நகர்/ வடக்கு,
பெல் ஓட்டல் அருகில், சிவகாசி – 626 123.

5. மேற்பார்வை பொறியாளர், – By email
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
65/1, ராமமூர்த்தி ரோடு, விருதுநகர் – 626 001.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.